EELA NADU LTD.

★ ★
Registered as a Newspaper in Ceylon விலைசதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (5-1-66) இதழ் 327

விசுவாவசு மார்கழி 21 நமழான் பிறை 12 புதன்கிழமை

## புதிய உலகை கண்டது யார்?

வாஷிங்டன், ஜன 4

புதிய உலகமான அமெரிக்காவைக் கண்டுபிடித்தது யார்? கொலம்பஸ் அல்லவாம். கி. மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பே ஜப்பானியர்கள் அங்கு இறங்கியதாக இரு அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். புயலில் சிக்கிய ஜப்பானிய மீனவர்கள் அமெரிக்கக் கரைக்கு ஒதுக்கப்பட்டது குறித்துச் சான்றுகள் இருப்பதாக இந்த ஆராய்ச்சியாளர்கள் ''சயிண்டிபிக் அமெரிக்கன்'' என்ற சஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்,

# ஆசிரியர் இடமாற்றம்: புதிய ஏற்பாடு

## சாஸ்திரி - அயூப் பரஸ்பரம் சந்தித்து கைகுலுக்கினர்

### டாஷ்கண்ட் பேச்சு ஆரம்பம்

டாஷ்கண்ட், ஜன. 4

உலக நாடுகள் சிரத்தையுடன் கவனித்து வரும் டாஷ்கண்ட் சம்பாஷனைகள் இன்று ஆரம்பமாயின. பிரதமர் சாஸ்திரியும், ஜனதிபதி அயூப்கானும் ரஷ்யப் பிரதமர் முன்னிலையில் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

திரு. சாஸ்திரி, தாம் தங்கியிருக்கும் இல்லத்திலிருந்து சில நூறுயார் தூரத்திலுள்ள மகாநாட்டு கட்டிடத்திற்கு நடந்து வந்த போது சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் அவரை வரவேற்றார்.

சற்று நேரம் கழித்து வந்த அயூபையும் ரஷ்யப் பிரதமர் கைகுலுக்கி வரவேற்றார்.

திரு. கோஸிஜின் தலைமையில் திரு. சாஸ்திரி, திரு. அயூப் ஆகியோர் வட்ட மேஜையைச் சுற்றி அமர்ந்தனர். அப்போது மூன்று நாடுகளின் ஆலோசகர்களும் உடனிருந்தனர்.

பின் இந்திய, பாகிஸ்தான் தலைவர்கள் தனி அறைக்குச் சென்று பேச ஆரம்பித்தனர்.

டாஷ்கண்ட் சந்திப்பு முன்னேற்றத்துக்கு முக்கியமான விஷயம் என சோவியத் பிரதமர் கோஸிஜின் தமது துவக்கவுரையில் கூறினர்.

ஆப்கானிஸ்தான் பிரதமர் திரு. கோஸிஜினுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், டாஷ்கண்ட் சம்பாஷனை வெற்றி பெறவேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

நேற்று டாஷ்கண்ட் விமான நிலையத்தில் ஒரு சிறிய தமாஷ் நடந்தது. சிவிலியன் உடையில் காஷ்மீரில் நடைபெற்ற ஊடுருவல் நினைவூட்டப்பட்டது.

இந்தியப் பிரதமருடன் சென்றிருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் குமாரமங்கலம் சிவில்உடையணிந்திருந்தார். உயர் சோவியத் அதிகாரி ஒருவர் அவரை நோக்கி ''நீங்கள் மறைந்திருக்கும் ஒரு ராணுவ வீரரா?'' என்று கேட்டார். அப்போது அனைவரும் சிரித்தனர். (பி. டி. ஐ.)

## ஜி. ஜி. - கல்விமந்திரி சந்திப்பின் விளைவுகள்

கொழும்பு, புதன்

தமிழாசிரியர்களின் இடமாற்றத்திட்டம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., நேற்று பிற்பகல் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலையைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியதன் பயனாக தமிழாசிரியர்களின் இடமாற்றங்கள் சம்பந்தமாக கல்விப்பகுதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை விபரங்கள் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளன.

கல்வி மந்திரியை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலுள்ள தூதுகோஷ்டியினர் நேற்று சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதன் பின்னர் கல்வி இலாகாவின் இடமாற்றக் கொள்கைகளை பத்திரிகைகளுக்கு வெளியிட மந்திரி நடவடிக்கை மேற்கொண்டார் என அறியப்படுகிறது.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையிலுள்ள தூதுகோஷ்டியில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், திரு. சிவானந்தம் ஆகியோர் இருந்தனர்.

காங்கிரஸ் தூதுகோஷ்டியினரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடமாற்றம் சம்பந்தமான கல்வி இலாகாவின் கொள்கைகளும் திட்டங்களும் வருமாறு:

### இடமாற்றம பெறுபவர்கள்

பின்வருபவர்கள் இடமாற்றம்பெறத் தகுதியுள்ளவர்களாகும்:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நான்கு வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய திருமணமாகதவர்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பத்து (10) வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய நாற்பத்தியாறு (46) வயதுக்கு உட்பட்ட திருமணமான ஆசிரியர்கள் (தம்பதிகள்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏழு (7)வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய நாற்பத்தியொரு (41) வயதுக்கு மேற்பட்ட திருமணமான ஆசிரியர்கள் (தம்பதிகள்).

முப்பதுக்கும் நாற்பது வயதுக்குமுள்ள விவாகமாகாத ஆசிரியர்கள் (ஆண், பெண்).

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய நாற்பத்தியாறு (46) வயதுக்குட்பட்ட திருமணமான

(6-ம் பக்கம் பார்க்க)

## அதிசயக் குழந்தை

வவனியா, செவ்.

அதிசயமான குழந்தையொன்று கல்மடு என்னுமிடத்தில் பிறந்துள்ளது.

வவனியாவிலிருந்து எட்டு மைல்தூரத்திலுள்ள கல்மடு குடியேற்றத்திட்டத்தில் இக்குழந்தை பிறந்துள்ளது. குழந்தையின் மூக்குக்கு அருகே உதட்டில் வெடிப்பு ஏற்பட்டு அதன் வழியாக துதிக்கை ஒன்று வெளியே வந்திருக்கிறது இக்குழந்தை உயிருடன் இருக்கிறது. ஏராளமானவர்கள் இந்த அதிசயக் குழந்தையை பார்த்துச் செல்கின்றனர்.

## ஞாயிற்றுக்கிழமை பாடசாலை விடுமுறை?

### கல்வி மந்திரி ஆலோசனை; இவ்வாரம் முடிவு

கொள்ளுப்பிட்டி, செவ்வாய்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை விடவேண்டுமென்ற கோரிக்கை பற்றி கல்விமந்திரி ஆலோசனை செய்து வருவதாகவும் இதுபற்றி இவ்வாரத்துக்குள் இறுதிமுடிவு செய்யப்படுமென்றும் அறியப்படுகிறது.

போயாதினங்களிலும் அதற்கு முதல்தினங்களிலும் பாடசாலைக்கு விடுமுறை வழங்கும் யோசனையை விடுத்து போயாதினங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறைவிட வேண்டுமென்று சில ஸ்தாபனங்களும் கல்விமான்களும் யோசனை தெரிவித்திருப்பததாகவும் இதுபற்றி கல்விமந்திரி ஆலோசனை செய்துவருவதாகவும் இவ்வாரத்துக்குள் இறுதி முடிவு செய்யவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம் தேவாலய மைதானத்துக்குள்ளிருக்கும் பாடசாலைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் சில மணிநேரம் தாமதித்து ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கோரப்பட்டிருப்பதாகவும், இதுபற்றியும் மந்திரி ஆலோசனை செய்துவருவதாகவும் தெரியவத்கிறது.

## நூல் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

கலாயோகி ஆனந்தகுமாரசாமியின் 'டான்ஸ் ஒவ் சிவா' என்ற ஆங்கில நூலை மொழிபெயர்த்த வித்தியாரத்தினம் நவாலியூர் சோ. நடராசா 'சிவானந்த நடனம்' என்ற அந்நூலை நாளை பிற்பகல் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் விழாவில் அரங்கேற்றம் செய்வார். விழாவிற்கு திரு. அம்பிகைபாகன் தலைமைவகிப்பார்.

## வெற்றிதோல்வி இன்றி முடிவு

மெல்போன், ஜன். 4

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற 2 வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி எவருக்கும் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இறுதி ஸ்கோர் விபரம் வருமாறு:-

**ஆஸ்திரேலியா**

முதல் இன்னிங்ஸ் 358 ரன்கள். 2 ம் இன்னிங்ஸ் 426 ரன்கள்.

**இங்கிலாந்து**

முதல் இன்னிங்ஸ் 558 ரன்கள். 2 ம் இன்னிங்ஸ் விக்கெட் நஷ்டமின்றி 5 ரன்கள்.

## நியாயவிலை மீன்கடை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பஜாரில் இன்று நியாய விலை மீன் விற்பனவு நிலையமொன்று திறக்கப்படவிருக்கிறது. வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜயம் திறக்கும் இந்த நியாயவிலைக் கடையினால் பொதுமக்களின் கஷ்டமும் கடற்றொழிலாளரின் கஷ்டமும் ஓரளவு குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடற்றொழிலாளர் கஷ்டப்பட்டுப்பிடிக்கும் மீன்களுக்கு, இப்பொழுதுள்ள ஏலவிற்பனவு முறையின் மூலம் தகுந்த பயன் கிடைக்காமல், இலாபம் எல்லாம் 'தரகர்' களுக்கே போகிறதென்றும் இந்த நியாயவிலைக் கடையினால் கடற்றொழிலாளி தரகர் வலையில் வீழாது தப்பிவிட முடியுமென்றும், மீன் வாங்கும் பொதுமக்கள் கஷ்டப்படாமல் நியாயமான விலையில் மீன்களை நிறுத்து வாங்க நியாய விலைக்கடை வழிசெய்கிறதென்றும், கொழும்புக்கு நல்ல மீன்கள்செல்வதால் இங்கு நல்ல மீன்கிடைக்காமல் மனம் சலிக்கும் மக்களுக்கு நல்ல மீன் கிடைக்கவும் இந்தநியாய விலைக்கடை உதவுமென்றும் சமாஜத்தலைவர் திரு. ச. ஸ்ரனிஸ்லாஸ் தெரிவிக்கிறார். நியாயவிலை மீன்கடைக்கு கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒத்துழைப்பு அளிக்க முன் வந்திருப்பதுபோல்பொது மக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென அவர் கோருகிறார்.

மீன் மார்க்கட்டுக்கு அருகேயுள்ள கட்டிடத்தில் இன்று காலை 8-30க்கு நியாய விலை மீன் விற்பனவு நிலையம் திறக்கப்படுமென சமாஜம் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொங்கல் வாழ்த்துக்கள் ஏராளமான சைஸ்களில் குறைந்த விலைகளில் வேகமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு கழிவு உண்டு. உடனே உங்கள் தேவைகளுக்கு எழுதுங்கள். தமிழ்ப்பண்ணை, 193, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1679

பேர்க்குஷன் 55 SRI 358 இலக்கமுடைய ரெயிலரும் ஒரு சோடி 12. 4 | 11-28 ராக்ரர் ரையரும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். எல்லாம்நல்ல நிலைமையிலுண்டு. க. பொன்னுச்சாமி, மனேச்சர், பல்லவராயன்கட்டு. 1680

### தேவை

வர்த்தகர் ஒருவருக்குஉடனடியாக ருபா 50,000/- பணமாகத்தேவை. யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள ஒரு காணியும் சினிமா தியேட்டரும் ஈடாகவைக்கப்படும். விபரங்களுக்குஎழுத்துமூலம் விளம்பர இல.1677ஈழநாடு மேற்பார்த்து என எழுதவும். 1677

ரிங்கர் (Tinker) வேலையில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும்: வின்ஸ்லோஸ், 149, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 1657

கொழும்பில் மண் ஏற்றி இறக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு விவசாய டிராக்டர் சாரதிகள் தேவை. விண்ணப்பதாரர், லொறி, பாரமான வாகனங்கள் ஓட்டுவதற்கான லைசென்ஸ் வைத்திருக்கவேண்டும். ரொக்கப்பிணை கட்டத் தயாராக இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும்; ஜி. ஜனார்த்தனன், 133, மீத்தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டியா, கொலன்னுவ. 1693

புல்டோசர், டிராக்டர், சாமான் ஏற்றும் வாகனங்களுக்கு மெக்கானிக்குகளும் சுப்பவைசர்களும் தேவை. ரொக்கப்பிணை கட்ட வேண்டும். விண்ணப்பிக்கவும்: ஜி; ஜனார்த்தனன், 133, மீத் தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டியா, கொலன்னுவ. 1691

கொழும்பில் ஒப்பந்தஅடிப்படையில் வேலைசெய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. ரொக்கப்பிணை கட்டவேண்டும். விண்ணப்பிக்கவும்: ஜி.ஜனார்த்தனன், 133, மீத் தோட்டமுல்ல ரோட், வெல்லம்பிட்டிய, கொலன்னுவ. 1692

### கல்வி

இந்த மாதத்தில் எங்கள் ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், உயர்தரம்,கலை/விஞ்ஞானம், ஜி. சி. ஈ. முதல்வருட விஞ்ஞான வகுப்புகளில் சேரும் பதினெட்டுமாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும். தங்க வசதியுண்டு. யுனைட்டட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி,கரவெட்டி/107, ஈருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1672

### கல்வி

கல்வி நிலையமும் விடுதிச்சாலையும் 10-1-66-ல் வகுப்புக்கள்ஆரம்பமாகும். 1.கல்விப் பொதுத்தராதர (உயர்தர, சாதாரணம்) வகுப்புக்களுக்குரிய கலைப்பாடங்களும், விஞ்ஞான பாடங்களும்கற்பிக்கப்படும். 2.அங்கக இரசாயனம் (Organic Chemistay) இரண்டு மாதங்களிலும் எண்கணிதம் ஒரு மாதத்திலும் திருப்பிக் கற்பிக்கப்படும். 3.எட்டாம்வகுப்புக்குரிய எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும். 4வேறுபாடசாலைகளிற்படிக்கும் மாணவர்களுக்கு மாலையிலும் ஏனையோருக்குக் காலையிலும் வகுப்புக்கள் நடைபெறும். 5. வேறுபாடசாலைகளிற் படிக்கும் மாணவர்களுக்கும் விடுதி வசதி உண்டு. 43, 3-ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1686

## நாடக அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், புதன்

எல்லாளன் நாடகமன்றத்தினர் நாளை நெடுந்தீவு அரசினர் மாவித்தியாலய திறந்தவெளி அரங்கில் 'யார் கட்டிய தாலி' என்ற நாடகத்தை அரங்கேற்றுவார்கள். பொங்கலன்று 'மாவீரன் சங்கிலியன்' என்ற நாடகத்தை அரங்கேற்றுவார்கள்.

### கல்வி

உங்கள் பிள்ளைகளை எங்கள் பாலர் (Nursery) வகுப்பில் சேருங்கள். தையல் வகுப்பும் நடத்தப்படுகின்றது. ஜி. ஏ. கியூ/உயர்தர நிலை மாணவர்களுக்கு ஆய்வு விரிவுரை வாரம் நடத்தப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1671




## கொழும்பு

புதன் 5 - 1 - 66

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-25 திருவெம்பாவை — மாணிக்கவிநாயகர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 திருவெம்பாவைவிளக்கம், 7-10திருப்பாவை, 7-30 தேர்ந்த இசை, 7-45 திரை இசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள். 344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படப் பாட்டுக்கள்.

இரவு6-15கிராமசஞ்சிகை 6-45 பாட்டு, 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரிநெட்டும், 9-30 பாட்டு—ஜெயலக்ஷ்மி சதாசிவம், 10-00 நேயர் விருப்பம்.

## மீன்பிடி மந்திரிக்கு கோரிக்கை

நீர்கொழும்பு, செவ்வாய்

இலங்கை முழுவதும் மீனை ருத்தல் கணக்கில் நிறுத்து புற்பனை செய்வதற்கு சட்ட மூலம் வழிவகுக்குமாறு கைத்தொழில் மீன்பிடி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நீர்கொழும்பு மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## அபிவிருத்தித்திட்டம்

பம்பலப்பிட்டி, செவ்.

அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் ஐந்துவருடஅபிவிருத்தித்திட்டமொன்றையும் சேர்த்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நான்கு திட்டக் கமிட்டிகள் இதற்கான திட்டத்தை வகுத்துவருகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாஷ்கண்ட் பேச்சின் வெற்றியில் உலக தலைநகர்களில் நம்பிக்கை

# இந்தோ-பாக். சண்டைக்குப்பின் சாஸ்திரி அயூப் முதல் சந்திப்பு

டாஷ்கண்ட், ஜன. 4

**இந்தோ-பாகிஸ்தான் சண்டைக்குப் பின் இந்தியப் பிரதமர் சாஸ்திரியும், பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் இன்று மாலை டாஷ்கண்டில் சந்தித்துப் பேசினர்.**

ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் அளித்த பகலுணவுக்கு முன் அவர்கள் சாதாரண முறையில் சந்தித்தனர். உணவுக்குப் பின், திரு. கொஸிஜினுடன் பூர்வாங்க பேச்சில் ஈடுபட்டு, அதன் பிறகு தனியறைக்குச் சென்று பேசினர். திரு. கொஸிஜின் தலைமையில் நடைபெற்ற பூர்வாங்கக் கூட்டத்தில் முதலில் ரஷ்யப் பிரதமரும், பின்பு இந்திய-பாகிஸ்தான் தலைவர்களும் சொற்பொழிவாற்றினர். பத்திரிகை நிருபர்கள் அப்போது அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

திரு. கொஸிஜின் நேற்று இரு தலைவர்களையும் தனித் தனியாகச் சந்தித்து, சம்பாஷணையைப் பொதுவாக அவர்கள் அணுகும் முறை பற்றி அறிந்தார்.

வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோ திரு. சுவர்ண் சிங்குடன் பூர்வாங்க சம்பாஷணை பற்றி விவாதித்தார்.

டாஷ்கண்ட் பேச்சுக்களில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படுமென நம்புவதாக அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்தது. செப்டம்பர் 20ந் தேதி பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தை அமுல்செய்யப் பேச்சுக்கள் வழிவகுக்குமென நம்புவதாக அமெரிக்க வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

யுதாண்டின் சார்பாக ஐ. நா. அதிகாரி ஒருவர் டாஷ்கண்ட் பேச்சுக்களை வரவேற்றார்.

இருதேசத் தலைவர்களும் டாஷ்கண்ட் புறப்படுமுன் விடுத்த அறிக்கைகள் ஊக்கமூட்டுவதாய் இருக்கிறதென டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறியது. எனினும் இரு நாடுகளுக்குமிடையே 18 ஆண்டுக்காலமாக இருந்துவரும் பிரச்னைகளைச் சுலபமாகத் தீர்க்கமுடியாதென்றும், கஷ்டமான பிரச்னைகள் இரு தலைவர்களையும் எதிர்நோக்கியிருக்கிறதென்றும் அது மேலும் கூறியது.

போர்நிறுத்த ஏற்பாட்டை உறுதிப்படுத்துவது, படைவிலக்கம் ஆகியன பற்றி இரு தலைவர்களும் பேசுவார்களெனத் தெரிகிறது.

பாகிஸ்தான் போர்நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும் அல்லது வன்முறைச்செயலை நிறுத்த உறுதியளிக்க வேண்டுமென இந்தியா கருதுகிறது.

ஆனால் காஷ்மீர் மீதான ஆட்சியுரிமை விஷயத்தில் இந்தியா உறுதியாக இருக்குமெனக் கூறப்பட்டது.

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் தலைவர் திரு. ஹமீத் டாஷ்கண்ட் பேச்சில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

நேற்று லாகூரில் இரு தேச ராணுவப் பிரதிநிதிகளுக்கிடையே பேச்சுக்கள் ஆரம்பமாகின. யுதாண்டின் பிரதிநிதி திரு. மராம்பியோ பேச்சுக்கு வழிசெய்தார். பேச்சு முடிவுபற்றி அறிவிக்கப்படவில்லை. அடுத்த சந்திப்பு அமிர்தசரஸில் நடைபெறும்.

## மேற்காசியாவில் ஊடுருவ சீனா முயல்கிறதாம்

### ஏமனுக்கு துருப்புக்களை அனுப்ப தீர்மானம்?

ஏடன், ஜன. 4

ஆபிரிக்காவில் செல்வாக்கிழந்துவரும்சீனா இப்போது மேற்காசியாவில் ஊடுருவ முயன்றுவருகிறது.

ஏமனிலிருந்து ஐக்கிய அராபியக் குடியரசுத் துருப்புகள் வாபஸ் பெற்றால் சீனா அங்கு துருப்புகளை அனுப்ப விருப்பதாக மன்னர் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் டகோமி சீனாவுடன் ராஜீய உறவை முறித்துக்கொண்டுவிட்டது. அங்குள்ள சீனத்தூதராலய ஊழியர்கள் வெளியேற 4 நாள் அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வேறு 'இரண்டு மத்திய ஆபிரிக்க நாடுகளிலும் சீன எதிர்ப்புணர்ச்சி வளர்ந்து வருகிறது.

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் சட்டவிரோதமாக நுழைந்துள்ள சீனர்களைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்பர் போல்டாவில் ராணுவம் அரசாங்கத்தைக் கைபற்றியபின் விடுத்த அறிக்கையில் நாடு சீனர்களின் கைக்குப் போகாமலிருக்கும் பொருட்டே, மக்களின் விருப்பப்படி அரசாங்கத்தை எடுத்துக்கொண்டதாக ராணுவத் தலைவர் கூறினார்.

---

## முகர்ஜீ ஆசிய சாம்பியன்

கல்கத்தா, ஜன. 4

இந்தியாவின் 2-வதுசிறந்த டென்னிஸ் ஆட்டக்காரரான ஜய்திப் முகர்ஜீ, தேசிய சாம்பியன் ராமனுதன்கிருஷ்ணனை 6-4, 6-3, 6-2 புள்ளிகளால் தோற்கடித்து ஆசிய சாம்பியனானார். ஒரு இந்திய ஆட்டக்காரரால் கிருஷ்ணன் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.

இங்கு நடைபெற்ற சர்வதேச லான்டென்னிஸ் ஆசிய சாம்பியன் போட்டியில் இச்சம்பவம் நடைபெற்றது.

(பி.டி.ஐ,)

---

## தற்காலிக கவர்னர்

சென்னை, ஜன. 4

தமிழ்நாடு கவர்னர் திரு. ஜெயசாமராஜ உடையார் 6 மாத விடுமுறையில் செல்வதையிட்டு, சென்னை பிரதம நீதிபதி திரு. சந்திரா ரெட்டி தற்காலிக கவர்னராக நேற்று பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

## தமிழர்கள் உண்ணாவிரதம்

கோலாலம்பூர். ஜன. 4

மலேஸிய அரசாங்கக் காரியாலயத்துக்கு முன் இரு தென்னிந்தியத் தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

தமிழ்மொழி ஆசிரியர்களுக்கு உயர் பயிற்சி அளிக்க வசதி செய்துதரவேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்துவதே அவர்கள் நோக்கம்.

"எனது கோரிக்கைகள் வெல்லும்வரை இங்கேயே இருப்பேன், அல்லது பட்டினியால் சாவேன்" என எஸ்.வி. லிங்கம் என்ற அந்தஆசிரியர்களில் ஒருவர் ராய்ட்டரிடம் கூறினார்.

(பி.டி.ஸி.)

## லாகோஸ மகாநாடு

புதுடில்லி, ஜன. 4

நைஜீரிய தலைநகர் லாகோஸில் நடைபெறவிருக்கும் ரொடீஷியா சம்பந்தமான காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இந்தியாசார்பில் சட்டமந்திரி திரு ஏ. கே. சென் கலந்துகொள்வார்.

டாஷ்கண்ட் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்தியப் பிரதமரும், வெளிவிவகார மந்திரியும் ரஷ்யா சென்றிருப்பதால் லாகோஸ் மகாநாட்டில் அவர்கள் கலந்துகொள்ளமுடியாதென்றுஅறிவிக்கப்பட்டது.

---

## சைப்ரஸ் வீதிக்கு திம்மையா பெயர்

நிக்கோஸியா, ஜன. 4

தெற்கு சைப்பிரஸிலுள்ள துறைமுகப் பட்டினமான லார்னகாவில் முக்கிய பிரதான வீதிகள் ஒன்றினுக்கு 'ஜெனரல் திம்மையா அவினியூ' எனப்பெயர் சூட்டுவதென சைப்பிரஸ் அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். ஐ. நா. தளபதியாக இருந்த திம்மையா சென்ற மாதம் சைப்பிரஸில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

(பி.டி.ஐ.)

---

## தமிழ் நாட்டு ஆணழகன்

மதுரை, ஜன. 4

இங்கு நடைபெற்ற ஆணழகன் போட்டியில் தமிழ் நாட்டின் ஆணழகனாக சென்னையைச் சேர்ந்த பி. ராமகிருஷ்ணன் தெரிவு செய்யப்பட்டார்.

(பி.டி.ஐ.)

## 3லட்சம் பக்தர்கள்

கோயமுத்தூர், ஜன. 4

இங்கு நடைபெற்ற அய்யப்பபூஜையில் 3லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

(பி.டி.ஐ.)

## தென் வியட்னுமுக்கு துருப்புக்களை அனுப்புவோம்

### யுதாண்டுக்கு கம்போடியா விடுக்கும் எச்சரிக்கை

நான்பெங், ஜன. 4

அமெரிக்காவும், தென் வியட்னுமும் தனது எல்லையை மீறினால், வடவியட்னுமுக்குத் துருப்புக்களை அனுப்பப்போவதாகக் கம்போடியா ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டுக்குத் தெரிவித்திருக்கிறது.

சென்ற வாரம் 10 விமானங்களும், ஹெலிகோப்டர்களும் கம்போடிய எல்லையில் தாக்குதல் நடத்தியதாயும் அது குற்றஞ்சாட்டியது.

இதற்கிடையில் வியட்னுமில் அமைதியை ஏற்படுத்தும் அமெரிக்க முயற்சியில் உலகத் தலைநகர்களில் பல பிரதிநிதிகள் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்கள்.

ஆசிய சுற்றுப்பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த உப ஜனதிபதி ஹம்ப்ரி நேற்று வாஷிங்டன் திரும்பினார்.

லண்டனில் ரஷ்யத்தூதர் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸனைச் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்கப் பிரதிநிதி கோல்ட்பர்க் அதற்கு முன் பிரதமரைச் சந்தித்தார்.

வாஷிங்டனில் ஜனதிபதி ஜோன்ஸன் தம் உயர் ஆலோசகருடன் வியட்னும் பற்றி ஆலோசனை நடத்தினார்.

வடவியட்னுமுக்கு இறுதி எச்சரிக்கை எதுவும் அனுப்பவில்லையென்றும், ஆனால் முடிவுசெய்யும் தருணம் நெருங்குகிறதென்றும் திரு. ஜோன்ஸன் கூறினார்.

வடவியட்னும் சமாதானத்தில் இன்னும் விருப்பம் தெரிவிக்கவில்லையென்றும், வியட்னுமில் அமெரிக்க சரணகதிஒருபோதும் கிடையாதென்றும் உபஜனதிபதி ஹம்ப்ரி கூறினார்.

ரஷ்ய கம்யூனிஸ்கட்சித் தலைவர் ஷெலபின் இவ்வாரம் வடவியட்னும் செல்கின்றார்.

நேற்று அமெரிக்க, ஆஸ்திரேலிய, நியூஸிலந்து துருப்புக்கள் 100க்கு மேலான வியட்காங்கியரைக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

---

## டைம்ஸ், கார்டியன்

லண்டன், ஜன. 4

டைம்ஸ், கார்டியன் ஆகிய இரு பிரிட்டிஷ் பத்திரிகைகள் தங்கள் ஆசிரியத் தலையங்கத்தில் டாஷ்கண்ட் பேச்சு வெற்றி பெறுவதில் சந்தேகம் தெரிவித்துள்ளன.

(பி.டி.ஸி.)

---

## 1000 ஆண்டு சுற்றும்

மாஸ்கோ. ஜன. 4

சோவியத் ரஷ்யாவின் 5 ஆளில்லா கிரகங்கள் 1,000 ஆண்டுகளுக்குமேல் அயன வெளியில் சுற்றுமென 'பிராவ்டா' கூறியது.

(பி.டி.ஸி.)

---

## கியூபாவில் காலனி எதிர்ப்பு

ஹவானா, ஜன. 4

கியூபா தலைநகர் ஹவானாவில் காலனி எதிர்ப்பு மகாநாட்டில் ஆசியா, ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 100 நாடுகளின் 500 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

## 90 பேர் பலி

லாகோஸ், ஜன. 4

மேற்கு நைஜீரியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியில் 90 பேர் கொல்லப்பட்டனர்.

---

## உரத்திற்கு 5 கோடி டாலர்

புதுடில்லி, ஜன. 4

இந்தியா, ரசாயன உரம் பெறுவதற்கு 5 கோடி டாலர் கடனளிக்கும் ஒப்பந்தத்தில் அமெரிக்கா இன்று கைச்சாத்திட்டது.

---

## இந்தியா போட்டியிடும்

நியூயோர்க், ஜன. 4

பாதுகாப்புச் சபையின் ஆசியாவுக்கான ஸ்தானத்திற்கு இந்தியா போட்டியிடுமென அறிவிக்கப்பட்டது.

---

## இந்தியாவில் கட்டுப்பணம் உயரும்

புதுடில்லி, ஜன. 4

இனி வரும் தேர்தல்களில் பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நிற்பவர்கள் ரூ. 1500 முற்பணமும், ராஜ்ய சட்டசபைகளுக்கு நிற்பவர்கள் ரூ. 750 முற்பணமும் கட்டும்படியாக, கட்டுப்பணத்தை உயர்த்துமாறு தேர்தல் கமிஷனர் திரு. சுந்தரம் யோசனை கூறியிருக்கிறார்.

---

## ஈராக்கில் கடும்சண்டை

பாக்தாத், ஜன. 4

ஈராக்கில் கடும்சண்டை ஏற்பட்டிருப்பதாயும் குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களால் வளைக்கப்பட்டிருக்கும் 2000 அரசாங்கத் துருப்புக்களை விடுவிக்க ஈராக் விமானப் படை கிளர்ச்சிக்காரர்கள் மீது குண்டு வீசித் தாக்கிவருகிறது என்றும் அறிவிக்கப்படுகிறது. ஈரானுக்குள் அவர்கள் ஓடாமலிருக்க எல்லையைமூடும்படி ஈராக், ஈரானைக் கேட்டிருக்கிறது.

---

## கிராமசபையின் எதிர்ப்பு

களுத்துறை, செவ்.

'எம். பி.க்களின் அலவன்சுகளை உயர்த்துவதால் இலங்கையின் பொருளாதாரநிலை பாதிக்கப்படும். இந்த நாட்டின் மீது பற்றுள்ளவர்கள் எம். பி.க்களின் சம்பளத்தையும் கொழுத்த சம்பளம் பெறும் உயர்தர உத்தியோகத்தரின் சம்பளத்தையும் குறைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளவேண்டும்.'

இவ்வாறு அடிகரிப்பற்று கிராமசபையின் மதாந்தக் கூட்டத்தில் பேசிய திரு. ஏ. எல். தர்மதாசா குறிப்பிட்டார்.

கிராமசபைத் தலைவர் திரு. டி. சி. டபிள்யு கன்னங்கரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், எம். பி.க்களின் அலவன்ஸை உயர்த்துவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் பிரேரணையொன்றைக் கொண்டுவந்து பேசுகையிலேயே திரு. தர்மதாசா மேற்கண்டவாறு கூறினார். இப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமாதானமும் சுதந்திரமும் இலகுவில் கிடைத்துவிடுவதில்லை. உறுதியற்றதும் பயங்கரமானதொரு சூழ்நிலை நிலையை எதிர்நோக்கியே நாம் வாழ வேண்டியிருக்கிறது. இவற்றிலிருந்து ஒவ்வொரு நாட்டினரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமானல் பலமுள்ளவர்கள் நீதியுடனும் பலகீனர்கள் பாதுகாப்புடனும் வாழும் காலம் வந்தேதீரும்.
— கென்னடி

ஈழநாடு
EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 329
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 21 உ (5-1-66)

## திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்

உலக அரங்கமாகிய ஐக்கிய நாடுகள் மகா சபைக் கூட்டத்தில் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு, உலகப் பிரச்னைகளில் இலங்கையின் கொள்கைகளைத் தெளிவாக எடுத்துக்கூறியதுடன் புதிய யோசனைகளையும் தெரிவித்து இலங்கையின்புகழையும், பெருமையையும் உலகில் நிலைநாட்டியதுமட்டுமல்லாமல் தமிழனின் திறமைக்கும் சாதனைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி, இன்று தமது தொகுதிக்கு வரும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைஇதர மக்களுடன் நாமும் சேர்ந்து 'வருக!' என வரவேற்கிறேம்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அரசியல் கொள்கைகள், கோட்பாடுகளில் தமிழ் பேசும் மக்களுக்கிடையிலும் இலங்கை வாழ் மக்களுக்கிடையிலும் வேறுபாடு இருக்கலாம். ஆனல் அவரது நாவன்மையிலும் அரசியல், சட்ட ஞானத்திலும் அவரைப் பாராட்டாதவர் மிகக்குறைவு.

ஐ. நா. மகாசபையில், உலக நாடுகளுக்கிடையில் ஏற்படும் நெருக்கடிகளுக்கானமூலாதாரப் பிரச்னைகளை அறிந்து அவற்றுக்கு நிரந்தரமான தீர்வுகாண்பதற்கான யோசனைகளையும், சண்டை ஏற்படும் இடங்களில் சமாதானத்தை ஏற்படுத்த ஐ. நா. நிரந்தர சமாதானப் படையொன்றை வைத்திருப்பதற்கான யோசனைகளையும் தெரிவித்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஐ. நா.வில் நவசீனவுக்கு அங்கத்துவமளிக்கவேண்டிய அவசியம் பற்றி இதற்குமுன் பலதடவைகள், பலநாட்டுப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறியிருந்த போதிலும், அதற்கான காரணங்களை, ஐ. நா, அமைப்புவிதிகளின் அடிப்படையைக் கொண்டே அவர் எடுத்துக்காட்டியிருப்பது ஐ, நா. மகாசபைக்கே புதியது. வல்லரசு முகாம்களும், ஆதிக்கக் கோஷ்டிகளும் சீனவை இன்னும் வெளியே வைத்திருப்பதற்குக்காரணமாக இருக்கலாம். ஆனல் 'நாடும் நாட்டு மக்களும் வாழும் இடம்தான் அரசும் அரசாங்கமும்இருக்கும்இடம் என்ற ஐ நா. அமைப்புத்திட்ட விதியைச் சுட்டிக்காட்டி, அந்த விதிக்கிணங்க நாடும் நாட்டுமக்களும் இருப்பது நவசீனவேயொழிய, நாட்டைவிட்டு ஓடி எங்கோ ஒரு மூலையிலிருக்கும் சியாங்கைஷேக்கின் அரசாங்கமல்ல' என்று சீனவை, ஐ. நா. அமைப்பு விதிகளின் படியே அங்கீகரிக்கவேண்டும் என திரு. ஜி. ஜி. கூறியது, வல்லரசுக்கோஷ்டிகளையும் சிந்திக்க வைத்திருக்கும்.

திரு. ஜி. ஜி. யின் நாவன்மை பற்றியோ, வாதத்திறமை பற்றியோ இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமில்லை. ஆனலும் ஐ. நா. வுக்கு இலங்கை, பிரதிநிதிகள் கோஷ்டியை அனுப்பும்பொழுது, அரசியல், சட்டம் ஆகியவைகளில் பரந்த ஞானமுடைய அரசியலில் அனுபவம்வாய்ந்த, திரு. பொன்னம்பலம் போன்ற ராஜதந்திரிகளை அனுப்பவேண்டுமென்பதையே, திரு. பொன்னம்பலத்தின் இந்தச் சாதனை, இலங்கை அரசாங்கத்துக்கு உணர்த்துவதாகும்.

## 'பதுக்கல் 'வேட்டை' முடிந்துவிட்டதா?'

பம்பலப்பிட்டி, செவ். பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வெளிக்கொண்டுவர நடைபெற்றுவந்த 'பதுக்கல் வேட்டை' நிறுத்தப்பட்டுவிட்டதா? அப்படியென்றல் இவ்விதம் நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன எனத் தெரிவிக்குமாறு தொழில் வேலைவாய்ப்பு, வீடமைப்பு உதவி மந்திரி திரு. சி. ஆர். பெலிக்மண வர்த்தமந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸைக் கேட்டுள்ளார். வர்த்தக மந்திரிக்கு திரு. பெலிகமண எழுதியுள்ள கடிதத்தில் சமீபத்திய பதுக்கல் வேட்டையால் அரசாங்கத்துக்கு நல்ல பெயர் கிடைத்துள்ளதென்றும் பாவனையாளர்கள் பொருள்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இதனல் ஏற்பட்டதென்றும் எடுத்துக் கூறியுள்ளார்.

## நாவலர், விவேகானந்தர் பேச்சுப்போட்டிகள்

கொழும்பு விவேகானந்த சபையினரால் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரதும், சுவாமி விவேகானந்தரதும் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டிகளின் பூர்வாங்கத் தேர்வுகள் இம்மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் கீழ்க்காணும்நிலையங்களில் நடைபெறும். கொழும்பு, விவேகானந்த சபை மண்டபம்; இரத்தினபுரி, அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலை: அட்டன்-புனிதகபிரியேல் பெண்கள் கல்லூரி, அனுராதபுரம்-விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயம், மட்டக்களப்ரு-துறைநீலாவணை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம்-வண்ணர்பண்ணை நாவலர்தமிழ்க் கலவன் பாடசாலை.

இப்போட்டிகட்குரிய இறுதித் தீர்வுகள் இம்மாதம் 12-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணி முதல் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறும். போட்டிகளிற் பரிசில்கள் பெறுவோர்க்குரிய தங்கம், வெள்ளிப்பதக்கங்களும், புத்தகப்பரிசில்களும் இம்மாதம் 13-ந்திகதி வியாழக்கிழமை கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடைபெறும் விவேகானந்தர் நினைவு [illegible] வில் வழங்கப்படும்.

# வருக!



வாதிடும் திறமையாலே
மக்களின் இடர்கள் நீக்கி
நீதியை நிறுத்தவல்ல
நெஞ்சுரம், தமிழர் என்ற
சாதியின் உயர்வு தன்னைத்
தரணியில் ஓங்கச் செய்யும்
போதமும் படைத்த வெற்றி
புரந்தர! வருக இன்றே!

அன்றுதொட் டின்று காறும்
அரசியல் வானில் என்றும்
குன்றிடை இட்ட தீபம்
கொடுத்திடும் ஒளியைப் போல
வென்றியால் எம்மினத்தின்
மேனிலை தெரிய வைத்துச்
சென்றிடும் திக்கு யாவும்
சீர்மையால் உயர்ந்து நின்ருய்

வருக நின் வருகை இந்த
வண்டமிழ் மக்களுக்கே
தருக நல் வெற்றி, தாழ்வுத்
தளையினை தளர்த்தி மேலாம்
பெருமையால் உயர வைத்த
பீடமை பெரியோய்! உன்றன்
வருகையால் எமதி னத்தின்
மாண்பினை உணரச் செய்க!

(இ. நா.)

## ஜி. ஜி. யின் உலகசமாதானப் பணி

சில வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. மைதானம் ஜனத்திரளால் மறைந்திருந்தது. மேடையின்மீது ஒருவர் பேசிக் கொண்டு நின்ருர். எல்லோரும் அவருடைய பேச்சை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டு நிற்கின்றனர். பேசிக் கொண்டு நின்ற அந்தச் சிறிய உருவம் சில சமயங்களில் சிங்கம்போல, ஆக்ரோஷத்துடன் கர்ஜித்தது. அவர் தாம் பேசவந்த விஷயத்தை விளக்கிக் கூறி முடிக்கும் தருணத்தில் மைதானத்தில், மேடைக்குச் சிறிது தூரத்தில் உட்காந்திருந்த ஒரு முதியவர் அமைதியான குரலில் [illegible] இங்கிலிஸிலும் பேசுங்கோ!'' என்று வேண்டுகோள் விடுத்தார். மேடையில் பேசிக் கொண்டிருந்தவர், முதியவரின் அந்த வேண்டுகோளை ஏற்று ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினர். ஆங்கிலம் விளங்கியவர்களும் விளங்காதவர்களும் சிலைபோல, அந்தச் சிறிய உருவத்தின் வாயைப் பார்த்தபடி நின்றனர். ''இங்கிலீஸில் பேசும்படி, வேண்டுகோள் விடுத்த அந்த முதியவர், தமக்கு அருகிலிருந்த இளைஞனைப் பார்த்து, ''பாத்தியாடா பொன்னன் இங்கிலிசில பேசிறமாதிரியை, இப்பிடி இங்கிலிஸில பேச இனி ஒருவன் பிறந்து வரவேணும்'' என்று உரிமையுடனும் அன்பின் மிகுதியாலும் வாய் விட்டுக் கூறினர் அந்த முதியவருக்கு 'இங்கிலிசு' தெரியுமோ, தெரியாதோ யாரறிவார்! இசைக் கச்சேரிகளுக்குச் செல்பவ

(5-ம் பக்கம் பாக்க)

### நாட்டிலும் நகரிலும்

போன ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த 'ஈழநாடு' வழக்கமான கதைகள், கட்டுரைகள் இல்லாமல் சாதாரண தினசரி போல் வெளி வந்தபோது எமது கலண்டர் மாற்றியமைக்கப்பட்டிருக்கும் உண்மை மனதில் ஊன்றித் தைத்தது. இப் புது வருடத்திலிருந்து அமாவாசை, பௌர்ணமி, அட்டமி-நவமி (இரண்டு) ஆகிய நான்கு தினங்களும் அவற்றிற்கு முந்திய அரை நாளும் லீவு நாட்கள்.

இந்த மாறுதல் எமது உள்நாட்டு வாழ்க்கையையும் பிறநாட்டு தொடர்புகளையும் எவ்வளவு தூரம் பாதிக்கப்போகிறதென்பது போகப்போகத்தான் தெரியும். முதலில் கொஞ்சநாட்களுக்கு புதிய கலண்டரின்படி நடந்து கொள்வது பலருக்கு சிரமமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இன்று ஞாயிற்றுக்கிழமை தானே என்று நினைத்துக் கொண்டு எட்டு மணி வரை தூங்குபவர்கள்பலர் இருப்பார்கள். வாரத்தின் மத்தியில்லீவுநாள்வந்தாலும்கால் சட்டையை மாட்டிக்கொண்டு ரயிலுக்கும் பஸ்ஸுக்கும் ஓடுபவர்கள் பலர் இருப்பார்கள்.

பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்கள் பாடும் திண்டாட்டம்தான். அவர்கள் ஒரு மாதம் முழுவதற்குமுரிய புதியகலண்டரை ஒவ்வொரு நாளும் புரட்டிப்பார்த்துக் கொண்டேயிருக்கவேண்டும். இன்று சனிக்கிழமை தானே என்று நினைத்துக் கொண்டுமுதல்நாளிரவு தங்களுடைய வீட்டுவேலைகளைச் செய்யாமல் விளையாடிக் கொண்டே இருந்துவிடுவார்கள்.

அமாவாசை, பௌர்ணமி, அட்டமி-நவமி எல்லாமே தமிழருடைய பஞ்சாங்கங்களில் வித்தியாசப் படுகின்றன. அட்டமி. நவமியில்ஒரு நல்ல காரியம் செய்யப்படாதென்பது எங்கள் பொது நம்பிக்கை. இதன்பிரகாரம் அட்டமி-நவமி கழித்து ஒரு கருமத்தைத் தொடங்கலாமென்று நினைத்திருந்தால் அன்று லீவுநாளாயிருக்கும்! ஆடி அமாவாசைக்கு எங்கள் பஞ்சாங்கப்படி ஒரு நாளும் அவர்களுடைய பஞ்சாங்கப்படி இன்னெரு நாளும் லீவு நாட்களாய் வரவும்கூடும்!

பிறநாடுகள் எல்லாமே ஞாயிற்றுக்கிழமையைத் தான் லீவு நாளாக வைத்திருக்கின்றன. அவற்ருேடு தொடர்பு வைத்திருக்கும் வியாபாரிகள் போன்றவர்களின் பாடும் சங்கடம்தான். ஞாயிற்றுக்கிழமையும் சனிக்கிழமை அரைநேரமும் பிறநாடுகளில் லீவு நாட்களாயிருக்க அவ்விடங்கன்ல் ஒரு வேலையும் நடைபெருது. இங்கே வேறு ஒன்றரை நாட்கள் லீவு நாட்களாயிருக்கும். ஆக, வாரத்தில்மூன்று நாட்கள் திருப்தியாகவேலை செய்யமுடியாது. எங்கள் துறைமுகங்களில் பிறநாட்டுக்கப்பல்கள் இறக்குமதி செய்ய வந்துநின்று இங்கே லீவு நாளாயிருந்தால் நாமே 'டிவறேஜ்' என்று குற்றம் கட்டவேண்டியும் வருமல்லவா?

ஃ ஃ ஃ

நண்பர் ஒருவர்நேர்முகப் பரீட்சைக்காக கொழும்புக்கு அழைசகப்பட்டிருந்தார். அவர்கொழும்புக்குப் புதியவர். ஸ்டேஷனில் இறங்கி தமக்குவந்தஅழைப்புக்கடிதத்தில் காணப்பட்ட தெருவின்பெயரைடாக்ஸிக்காரரிடம சொன்னர். அது ஏதோஒரு 'மாவத்தை' என்று முடிந்தது. டாக்ஸிக்காரர் 'திரு திரு, வென்று முழித்தார், அவருக்குஅந்த மாவத்தை எங்கிருக்கிறது

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜி. ஜி. யின் உலக . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெல்லோரும் சங்கீதம் முறைப்படி கற்றவர்களா என்ன?

பொதுக் கூட்டம் என்ருலென்ன, நீதிமன்றம் என்ருல் என்ன 'பொன்னன்' என்று பொதுமக்கள் உரிமையோடு அழைக்கும், அன்பனுக்கு அன்பனுய் நண்பனுக்கு நண்பனுய் வாழும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகிருரென்ருல் அவர் வாயிலிருந்தும் வெளிவரும் ஆங்கிலத்தை கேட்டு மகிழவும் பார்த்து மகிழவும் மக்கள் அங்கு திரள்வது சாதாரணம். பார்லிமெண்டில் திரு. பொன்னம்பலம் பேசுவதைப் பார்க்கவும் கேட்கவும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அப்படி வாய்ப்புக் கிடைப்பவர்களுக்கும் எல்லா நேரமும் கிடைப்பதில்லை. பார்லிமெண்டில் பேசுவதையே கேட்கும் வாய்ப்புக் கிடைக்காதவர்கள் திரு. பொன்னம்பலம் உலக அரங்கமாகிய ஐக்கிய நாடுகள் சபையில் பேசியதை எப்படிக் கேட்டிருக்க முடியும்? ஆனுல் இதுவரை இலங்கையிலுள்ளவர்களும் இலங்கைக்கு வந்த வெளிநாட்டவர்களும் தான் திரு. பொன்னம்பலத்தின் பேச்சு வன்மையை அறிந்து கொள்ள முடிந்தது. இப்போது உலக நாடுகளின் பிரதிநிதிகளும் அந்த வாய்ப்பைப் பெற்றனர். அதனுல் அவர்கள் மனந் திறந்து தங்கள் பாராட்டையும் தெரிவித்தனர். திரு. பொன்னம்பலத்துக்கு மட்டும் கிடைத்த பாராட்டு அல்ல அது; திரு. ஜி. ஜி யின் வார்த்தையில் சொன்னுல் 'தமிழ்ச்சாதி'க்கே கிடைத்த பாராட்டும் பெருமையுமாகும்.

இதற்கு முன்னும் ஐ. நா. மகாசபைக் கூட்டத்தில் இலங்கைக் கோஷ்டிக்குப் பலர் தலைமைதாங்கிச்சென்றிருக்கின்றனர். அவர்கள் அங்கு இலங்கையின் கருத்தை விளக்கியும் பேசியிருக்கின்றனர். இதற்குமுன் தமிழர் ஒருவரும் ஐ. நா. மகாசபையில் பேசியிருக்கிருர். ஆனுல் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மட்டும் உலகப் பிரதிநிதிகளின் பாராட்டையும் பெருமையையும்பெறுவதற்கு என்னகாரணம், அதுதான் அவரது நாவன்மை; சிந்தனைத்தெளிவு; எதையும் ஆணித்தரமாக எடுத்துக்கூறும் சக்தி; பரந்த ஞானம். இது எல்லோருக்கும் கிடைத்துவிடக் கூடியதல்ல.

இம்முறை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஐ. நா. மகாசபையில் இலங்கைக் கோஷ்டியின் தலைவராகக் கலந்துகொண்டது, இலங்கையின் சரித்திரத்தில் முக்கியம் பெற்றிருப்பதற்குப் பல காரணங்கள் உள.

(1) ஐ. நா. வில் இலங்கைக்கு அங்கத்துவம்கிடைத்த பின்னர், இலங்கையின் அனுபவம்மிக்க சிரேஷ்ட ராஜதந்திரியொருவர், இலங்கைப்பிரதமருக்கு பிரதிநிதித்துவம் வகித்து இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டது இதுதான் முதல் தடவை.

(2) இலங்கைவாழ் தமிழ் மக்களின் தலைவர் ஒருவர் இலங்கையின் தலைமைப் பிரதிநிதியாக உலக அரங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டதும் இதுதான் முதல் தடவை.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா ஐ. நா. மகாசபையில் நிகழ்த்திய உரைக்குப்பின் உலகப் பிரச்னைகளில் இலங்கையின் கருத்தை தெளிவாக விளக்கியதும் மற்றும் நாடுகள் உற்சாகமாக ஏற்றுக் கொண்டதுமான சிலபுதிய யோசனைகளைத் தெரிவித்ததும்இதுதான் முதல் தடவை.

உலகநாடுகள் பலவற்றுக்கிடையில் சண்டையும், சச்சரவும், போட்டியும், பூசலும் இருந்து வருகின்றன. இரு நாடுகளுக்கிடையில் சண்டை ஏற்பட்டதும் ஐ. நா. ஸ்தாபனம், சண்டை நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், சண்டை நிறுத்தத்தை மேற்பார்வையிட பார்வையாளர் குழு ஒன்றை அனுப்புவதும் இன்றுவரை இருந்துவரும் முறை. இந்த ஏற்பாடு, இதுவரை சரியாக வெற்றியளிக்கவில்லை. சண்டை நிறுத்தம் ஏற்படுவது, மீண்டும் புதிய உத்வேகத்துடன் சண்டையை ஆரம்பிப்பதற்கான ஒரு இடைக்கால ஏற்பாடாகவே இதுவரை இருந்துவருகிறது. இதனுல் பிரச்னைக்குள்ளாகும் நாட்டுமக்கள் வெறுப்பும் சலிப்பும் அடைவதுண்டு.

ஐ. நா. கடைப்பிடிக்கும் இந்த முறையில் மாறுதல் செய்வதற்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சிறந்த யோசனை ஒன்றை ஐ. நா. மகாசபையில் தெரிவித்தார். அதைப் பலநாடுகளும் வரவேற்றுள்ளன.

''தகராறுகள் தோன்றி நெருக்கடிக்குள்ளாகும் நாடுகளுக்கு நேரில் சென்று அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, நெருக்கடிக்கான காரணங்களைஒழித்துக்கட்டவும், தீராமலுள்ள இதர பிரச்னைகளுக்கும்வேற்றுமைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வுகாணவும் முயற்சிசெய்யக்கூடிய, பிரதிநிதித்துவ அந்தஸ்துள்ள, கௌரவமும் மதிப்புமுள்ளவர்களைக் கொண்ட ஒரு குழுவை ஐக்கியநாடுகளின் ஒரு கமிட்டியாக நியமிக்கவேண்டும்'' என்பது திரு. பொன்னம்பலம் தெரிவித்த ஒரு யோசனை.

பிரச்னைகளுக்கு அந்தந்தச் சமயத்தில் தீர்வுகாண்பதால் நாடுகளுக்கிடையில் தகராறு தீர்ந்துவிடவோ உலகசமாதானம் ஏற்படவோ வழிகிடைக்காததால் பிரச்னைகளின் மூல காரணங்களைஅறிந்து அவற்றுக்குத் தீர்வுகாண்பதே நிரந்தரப்பரிகாரம் என்பது தான் திரு ஜி. ஜி. யின் இந்த யோசனையின் உள்ளர்த்தம்.

''ஆட்சியாளர்களும், அரசாங்கங்களும் தத்தமது நாட்டின் எல்லைகளை விஸ்தரிப்பதில் சதாகாலமும் ஈடுபட்டுக்கொண்டு அந்த நோக்கத்தை ஈடேற்றுவதற்காக, தமது அதிகாரத்தை மேலும் விரிவடையைச் செய்வதற்காக போரைத் துணைக்கொள்ளவும் தயாராக இருக்கும்சமயத்திலெல்லாம் மனிதகுலம் மற்ரெரு புறத்தில் தனித்தும் ஒருமித்தும் சகல பிரதேசங்களிலும் சமாதானமே நிலைகொள்ள வேண்டுமென நோக்கம் கொண்டிருந்ததை சரித்திரம் நமக்கு நன்குஎடுத்துக்காட்டுகிறது; புலப்படுத்துகிறது'' என்று திரு. ஜி. ஜி. , ஐ. நா. வில் கூறியிருப்பது இலங்கையின் சமாதானக்கொள்கையை அவர் எடுத்துக்கூறிய முறையைக் காட்டுகிறது.

இலங்கையில் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் தமது நாட்டுக்கும், தமது மக்களுக்கும் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகச் செய்துவரும்பணியை இங்கு மீண்டும் குறிப்பிடுவது அவசியமில்லை.

வழக்கறிஞர்தொழிலிலும் அரசியல்பணியிலும் அவரது பெரும் புகழ் இலங்கைக்கு அப்பாலும் பரவியிருக்கிறது. இன்று உலக அமைதிக்கும் சமாதானத்துக்கும் அவரது யோசனை பயன்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

''தேனீ''

---

புதுடில்லி, ஜன. 4

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்துக்கு தமிழையும் உபயோகிக்கக்கூடிய வகைசெய்துள்ளது, இலங்கை அரசாங்கத்தின் நீதியையும் துணிகரமான போக்கையும் எடுத்துக்காட்டுகிறது' என் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற இந்தியப் பத்திரிகை 'இலங்கையில் உள்ள தமிழர்கள்' என்ற தலைப்பில் [illegible] தெரிவித்துள்ளது.

உங்கள் அச்சுவேலைகள்: தொலைபேசி 274

O தமிழ் O சிங்களம்
O ஆங்கிலம் O சமஸ்கிருதம்

ஆகிய நான்கு மொழிகளில் எந்த மொழியில் செய்யப்பட வேண்டும்?
எந்த மொழியிற் செய்யப்பட வேண்டுமாயினும்
யாழ்ப்பாணம்
32, கண்டி வீதியில் உள்ள
ஆசீர்வாதம் அச்சகம்,
புத்தகசாலையில்
நியாயமான செலவில் குறித்த நேரத்தில் செய்வித்துக் கொள்ளலாம்.

Manufacturers of Yarl Brand Aluminium
Utensils of Guaranteed Pure Aluminium
★
Elector- Deposition of Metals done Scientifically
Gold, Silver, Chromium & Nickel
Yarl Metal Industries, Jaffna
250 252 K. K. S. Road, :-: Jaffna

ஐ. நா. ஸ்தாபனத்திற்குச் சென்ற
முதல் தமிழ்ப் பிரதிநிதி
உயர்திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களை
மகிழ்ச்சியுடன் வரவேற்கின்ருேம்!
இரத்தினக் கற்கள், முத்துவகைகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ஆ. நல்லதம்பி
(பிரபல நகைவியாபாரம்)
75, கன்னுதிட்டி, :-: யாழ்ப்பாணம்.
போன்: 664

கண்கவர் தங்க, வைர நகைகளுக்கு
ஜெகதா ஆபரண மாளிகை
(உரிமையாளர்: செ. இரத்தினஐயா)
68G, கன்னுதிட்டி, :-: யாழ்ப்பாணம்.
போன்: 7242

றலி சைக்கிளா?
றலி சைக்கிள் உப உறுப்புகளா?
இலங்கையில் தயாராகும் லோட்டஸ
சைக்கிள் டயர் டியூப்புகளா?
மணிக்கூடுகள் கைக்கடிகாரங்கள்
திருத்த வேண்டுமா?
எல்லாவற்றிற்கும் விஜயம் செய்யுங்கள்
ரதி வாச்வோர்க்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
44-46. கஸ்தூரியார் வீதி, யரழ்ப்பாணம்.
தொலைபேசி : 7103

உள்ளம் மகிழும் உயர்ந்த தங்கப்பவுண் நகைகளுக்கு
உத்தரவாதத்துடன் கூடிய
★ நம்பிக்கை ★ நாணயம்
நயம் மிக்க ஸ்தாபனம்
துரையப்பாப்பத்தர் கோபாலசாமி
82/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது!
G. C. E. வகுப்புக்கு புதுமுறைச் சரித்திரம்
பகுதி II - (1453 — 1796)
இலங்கையும் ஐரோப்பிய தேசங்களும்
அடங்கன் I -- விலை 5-75
ஆசிரியர்:
ஆ. சபாரத்தினம் B. A., (Cey.)
[கல்விப்பகுதியின் திருத்தப்பட்ட பாட விதானத்திற்கு அமைய அநேக வரலாற்று நூல் ஆராய்ந்து எழுதப்பட்டது.]
கலைவாணி புத்தக நிலையம்
யாழ்ப்பாணம் - கண்டி - மட்டக்களப்பு.

ஹாஜியார்ஸ் நகை மாளிகை
யாழ்ப்பாணம் :-: கொழும்பு
டெலிபோன்
654 6941
தந்தி: VIEMEMES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர்நவீனம்

# வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

வழமைபோல் சிறுவர்கள் வெண்மணற்பரப்பில் கூடி கிழவரின் வரவை ஆவலுடன் காத்திருந்தனர். சற்று நேரத்தில் கிழவரும் வந்திடவே சிறுவர்கள் துள்ளிக் குதித்து ஓடோடிச் சென்று கிழவரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து வெண்மணற்பரப்பில்அமர்த்தினர். கிழவர்வழமைபோல் தமது தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டு தொடர்ந்தார்.

''கண்விழித்துப் பார்த்தேன் ஓர் இருள் அடர்ந்த அறையில் அடைபட்டுக் கிடப்பதாக உணர்ந்தேன். தட்டுத் தடுமாறி எழுந்து அறையை நான்கு புறமும் சோதனையிடலானேன். அறையின் ஓர் மூலையில் மனிதனின் மண்டையோடு போன்ற பொருள் இருப்பதை திறப்புத் துவாரத்திற்கூடாக வரும் சிறு வெளிச்சத்தின் துணையால் கண்டு கொண்டேன். பயந்தாங் கொள்ளியாகிய நான் சற்று அசட்டுத் தைரியத்துடன் மண்டையோட்டைப் பிடித்துத் திருகினேன். 'படார்' என்ற சத்தத்துடன் அறையின் தரை இரு கூறுகப் பிளந்தது. கூர்ந்து கவனித்தேன். படிகள் தென்பட்டது. சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு முன்பின் யோசியாது படி வழியே இறங்கி நடக்கலானேன். இறுதியில் படிகள் ஓர் மண்டப வாயிலைச் சென்றடைந்தது.

மண்டப வாயிலில் பழ மரங்கள் பல தென்பட்டன. சற்றுப் பசி அதிகமாதலால் கனிகளைப் பறிக்க முயற்சித்தேன். என்ன ஆச்சரியம் ஒவ்வொரு பழமும் சற்று ஏறக்குறைய மனிதனின் தலைமாதிரி கண், மூக்கு வாய், செவி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் அவை பேச ஆரம்பித்தன. ''அடே மனிதா நாம் யார் தெரியுமா? ஏன் விழிக்கிருய் உனக்குப் புரியவில்லையா? நாமும் உம்மைப் போல் மனிதன் தான் எமது முண்டம் அரக்கர்களுக்கும் அசுரர்களுக்கும் இரையாகி விட்டது, எமது தலைகள் எல்லாவற்றையும் அதோ அங்கே வருகிருர் அந்த மனிதர் என்று சொல்லி ஓர் சன்நியாசி போன்ற ஒருவரைச் சுட்டிக் காட்டி இவர்தான் விலங்குகளின் எலும்புகளை கொம்புகளாகவும் எம் தலைகளை கனிகளாகவும் ஒன்று சேர்த்தார். உனக்கும் இதே கெதிதான் ''உஷ் உஷ்'' அதோ அந்த மனிதர் நெருங்கி விட்டார். என்று கூறி கண்களை மூடிக் கொண்டன.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்த போதிலும் அந்த மனிதன் யார் என்று அறிய ஆவலாகவிருந்தது. பேசும் மரத்தை அம்மனிதன் நெருங்கிக் கொண்டிருந்தான். நான் அவன் கண்ணில் படாதபடி பக்கத்தேயிருந்த பாறைக்குள் ஒளித்து கொண்டு அவ்மனிதனை அவதானித்துக் கொண்டிருந்தேன்.

கிழவர் மரத்தை நெருங்கியதும் கையிலிருந்த உணவுப் பொட்டலத்தை அவிழ்த்து ஒவ்வொரு உருண்டையாக எடுத்து எறிந்து கொண்டிருந்தார். கனி போல் தொங்கும் தலைகள் அவற்றை உண்டுகொண்டிருந்தன. பின் கிழவர் வந்த வழியே திரும்பிவிட்டார். நான் மீண்டும் பேசும் மரத்தருகே வந்துநின்றேன். மரம் மீண்டும் பேச ஆரம்பித்தது.

பார்த்தாயா அம் மனிதனை? என்ன வயதிருக்குமென்று நினைக்கிருய்? என்ன விழிக்கிருய்? இதோ கேள். அந்த மனிதன்தான் இவ்வஞ்சி மலைவாசிகளின் மூதாதை. வயது இருநூறுக்கு மேல் இருக்கும். இது எதனுல் என்று தெரியுமா? இவனது மூதாதையார் தாம் பரம்பரை பரம்பரையாக ஆதரித்து வந்த ஒரு கொடிய தேவதையின் உருவச் சிலையைக் கொடுத்து இத்தெய்வத்துக்கு நீ வருடம் தோறும் ஆயிரம் சிறுவர்களையும், விலங்குகளையும் பலியிட்டு வருவாயாளுல் என்றும் இழமையோடு வாழ்வாய். ஒன்று தவறினுலும் நீயும் உனது சந்ததியினரும் சக்தியற்றவர்களாவீர்கள். அத்துடன் பலியிட்டவர்களின் தலைகளைக் கனியாக்கி மூன்று வேளையும் உணவூட்ட வேணும்.'' என்றுர்களாம். இக்கதையை அவனே ஒவ்வொரு பௌர்ணமியிலும் கூறுவான் என்று சொல்லிற்று!

இப்படியாக கதையை சிறுவர்களுக்குக் கூறி அத்துடன் நிறுத்திஞர் கிழவர்.

(தொடரும்)

— —

இது உண்மை

## நட்சத்திரத்தின் வயது எல்லை

கரு மேகத்தின் இடையே வைரக்கற்கள் போல, நட்சத்திரங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருக்கின்றன. இவை நம் கண்களுக்கு வெள்ளை நிறமாகத் தெரிகின்றன. இதனுல் நட்சத்திரங்களை ''வெள்ளி'' என்றும் சொல்வதுண்டு. ஆனுல் தொலைநோக்கியைக் கொண்டு வானத்தை ஆராயும் நிபுணர் எல்லா நட்சத்திரங்களும் வெள்ளையாகத் தெரிவதில்லை. சில கடுஞ் சிவப்பாகவும், சில இளஞ் சிவப்பாகவும், சில கடும் நீலமாகவும், சில மெல்லிய நீலமாகவும் தோன்றுகின்றன.

இந்த நிறவேறுபாட்டை வைத்து, நட்சத்திரங்களின் வயதை நிர்ணயிக்கலாம் என்கிருர்கள் நிபுணர்கள்.

வாயுவும் அணுத்துகள்களும் செறிந்த மேகக்கூட்டம் சுருங்கி நட்சத்திரம் ஆகும். இந்த நிறமாற்றம் ஏற்பட 500 கோடி வருடங்கள் ஆகலாம் எனக் கூறுகிருர்கள் நிபுணர்கள்.

## நெஞ்சத்தில் நிலைக்க

-மகான்-

### வெள்ளச்சேதம்

1228-ம் ஆண்டு ஹோலந்தில் பிறீஸ்லாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 1,00,000 பேர் மாண்டனர்.

1642-ம் ஆண்டு சீனுவில் கெய்பங்க் கடற்சுவரை பரட்சிக்காரர்கள் அழித்தனர். 3,00,000 பேர் மாண்டனர்.

1887-ம் ஆண்டு சீனுவில் குவாங்ஹோ ஆறு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஹோனன் மாகாணத்தில்பல ஆயிரக்கணக்கான மக்கள் பலியாஞர்கள்.

1889-ம் ஆண்டு அமெரிக்காவில் பெனிஸில் வேனியாவில் வெள்ளம். 2000 பேர் மாண்டனர்.

1896-ம் ஆண்டு ஜப்பானில் சன்றிகு எனுமிடத்தில் பூகம்பம் கடல் கொந்தளிப்பு. 27,000 பேர் மாண்டனர்.

1913-ம் ஆண்டு அமெரிக்கா. ஒஹியோ, இந்தியாளுவில் வெள்ளம் 730 பேர் பலி.

1939-ம் ஆண்டு, வட சீனுவில் வெள்ளப் பெருக்கு 10,00,000பேர் பலியாஞர்கள் அல்லது வீடிழந்தனர் அல்லது பட்டினியால் மடிந்தனர்.

1946-ம் ஆண்டு அலஸ்கா—ஹவாயில், கடல்கொந்தளிப்பு; 150 பேர் மாண்டனர்,

1947-ம் ஆண்டு ஜப்பானில் பெருவெள்ளம், புயல். 2000 பேர் பலி.

1948ம் ஆண்டு துருக்கியில், தென்துருக்கியில் இரு ஆறுகளில் வெள்ளப் பெருக்கு; நூற்றுக்கணக்கானவர்கள் பலி.

1948-ம் ஆண்டு சீனுவில், பூ (f) சோவுக்கருகில் வெள்ளம். 1000 பேர் மாண்டனர்.

1950-ம் ஆண்டு-சீனுவில், கிழக்கு, மேற்கு பகுதிகளில் வெள்ளப் பெருக்கு, 10,00,000 பேர் வீடிந்தனர். 500 பேர் மாண்டனர்.

1951-ம் ஆண்டு மன்சூரியாவில் - வெள்ளப் பெருக்கு. 1800 பேர் மாண்டனர். 3000 பேர் காணவில்லை.

1953-ம் ஆண்டு வட மேற்கு ஐரோப்பாவில் நெதர்லாந்து பகுதிகளில் பெருவெள்ளம். 1794 பேர் மாண்டனர்.

1954-ம் ஆண்டு ஈரானில் பெருவெள்ளம் 2000 யாத்திரிகர்கள் கொல்லப்பட்டனர்.

1955-ம் ஆண்டு இந்தியாவில் பஞ்சாப் பட்டியாலா, டில்லியில் வெள்ளம். 1700 பேர் மாண்டனர்.

அனைவருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்!
பாரத் ஸ்ருடியோ
(படம் பிடிப்பவர்கள்)
கஸ்தூரியார் வீதி, — யாழ்ப்பாணம்.
போன்: 252

சாறி வகைகளுக்கு
பிரதானமானவர்கள்
ராஜ்கோபால்ஸ்
36/1, பெரியகடை, :: :: யாழ்ப்பாணம்.
போன்: 7168

அரை நூற்ருண்டின் அரிய சேவை!
நகைகள் — வைரங்கள்
★
ஏ. கே. எஸ்.
நகைமாளிகை
யாழ்ப்பாணம்.
போன்: 519

இரவு பகல் எந்நேரமும் சேவை செய்யும்
ஜனன் மருந்துச்சாலை
47, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
O நிதான விலை
O சகல மருந்து வகைகள்
O சிறந்த சேவை

அழகிய தங்க வைர நகைகளுக்கு
சிறந்த இடம்
நாகலிங்கம் ஜுவல்லறி மார்ட்
85, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 305

உங்கள் திருப்தியே எங்கள் செல்வம்
தற்கால நாகரிகத்திற்கேற்ப
ஆண், பெண், சிறுவர்கள் அணியும்
புதிய ரக காலணி வகைகளும்
மற்றும் இதர சாய்ப்புச் சாமான்களும்
சகாயமாகப் பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்து வாருங்கள்
தி பேமஸ் ஸ்டோர்சுக்கு
தி பேமஸ் ஸ்டோர்ஸ்,
நெம். 10, 17, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து
BAYER
பொலித்தியோன்
FOLITHION
விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார்தின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், செவ்.

நாவாந்துறை, சென்மேரிஸ் சனமூக நிலையத்தில் நாத்தார்தினம் விசேஷ கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது.

கலை நிகழ்ச்சிகளை புலவர் கி. சூசைப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார் ''இருள் ஒலி'' என்னும் அண்ணுவி மரபு தழுவிய நாட்டுக்கூத்தும் தனிப்பாடல்களும் கரோல் நடனங்களும் இடம் பெற்றன.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கட்டளைக் குரவர் வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஓ.எம்.ஐ. உரைநிகழ்த்துகையில், கிறீஸ்து பெருமான் மனுக்குலம் முழுவதிலும் அன்புகொண்டு நடந்தது போல் நாமும் அன்புள்ளவர்களாய் ஒரு தாயின் பிள்ளைகள் போல் நடக்க வேண்டுமெனக் கூறினர்.

பின் திரு. நீ. ஆசீர்வாதம் தலைமையில் சனசமுகநிலைய புதுவருட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. பாதுகாவலர்கள் கி. சூசைப்பிள்ளை திரு. நீ. தொபியாஸ், திரு.வ. தேவசகாயம்.

தலைவர் திரு. நீ. எஸ்தாக்கி, உபதலைவர் திரு. ச. ஞானப்பிரகாசம். காரியதரிசி திரு. சூ. அமிர்தநாதர். உபகாரியதரிசி திரு. நீ. அருளானந்தம். தனதிகாரி திரு. சூ. மார்க்கு கணக்குப்பரிசோதகர் திரு. நீ. ஆசீர்வாதம். விளையாட்டுத்துறை தலைவர் திரு. எம். ஆசீர்வாதம், முத்தமிழ் மன்றத்தலைவர் திரு. செ. டானியல், சுகாதாரத்துறைத் தலைவர். திரு மடானீஷஸ். வாசிகசாலைத் தலைவர் திரு. கி. ஆரோக்கியநாதர்.

## பண்டசாலை சாம்பலாகியது

கொட்டாவ, செவ்வாய்

ருக்மல என்னுமிடத்தில் உள்ள பண்டசாலை தீப்பிடித்து முற்றாக சாம்பலாகியது. இது சம்பந்தமாக பண்டசாலையின் மனேஜரை பொலிசார் கைது செய்துள்ளனர். தொடர்ந்து புலன் விசாரணை நடத்தப்படுகிறது.

## 'சமயத்துறையில் ஆர்வம்'

திருக்கோணமலை, செவ்.

''சமயத்துறையில் ஆசிரியர்கள் ஆர்வம் காட்டுதல் வேண்டும். இதன் மூலம் நாம் ஒழுக்கம் நிறைந்த ஒரு சமுதாயத்தை வருங்காலத்தில் உருவாக்க முடியும்.''

இவ்வாறு திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராஜா திருக்கோணமலை சிவயோக சமாஜ ஆதரவில் சமாஜ ஆச்சிரமமண்டபத்ல் நடைபெற்ற திருவாசக விழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினர்.

புலவர் வை. சோமஸ்கந்தர் வரவேற்புரை கூறினர், ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினர். இறுதியில் சைவசிகாமணி பண்டிதர் இ. வடிவேலு 'திருவாசகம்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர்.

## 'புதிய பஸ்சேவை தொடங்குக'
### வரியிறுப்பாளர் சங்கம் கோரிக்கை

உடுப்பிடடி, செவ்வாய்

நெல்லியடி—பருத்தித்துறை பிரதான வீதியில் பெரிய தோட்டவெளிவழியாக தற்போது நடைபெற்றுவரும் பஸ் சேவையை மாலி சந்தியிருந்து வதிரிச்சந்தி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி வழியாக நடத்தும்படி கோரும் மகஜரொன்றை நெல்லியடி பட்டினசபை வரியிறுப்பாளர்சங்கம் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ மனேஜருக்கு அனுப்பிவைத்துள்ளது.

பெரியதோட்டவெளி வழியாக பஸ்சேவை நடைபெறுவதால் சுமார் ஒரு மைல் தூரத்திற்குப் பிரயாணிகள் எவருப் ஏறுவதில்லை எனவும் பாதையை வதிரி வழியாக மாற்றினுல் வடமராட்சி மத்திய கல்லூரி நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, நெல்லியடி பட்டின சபை, நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம். நெல்லியடி ஐக்கிய கலாசாலை முதலிய ஸ்தாபனங்களுக்கு மாணவர்களும் இதர உத்தியோகத்தர்களும் செல்ல வாய்ப்பாக இருக்கும் என்றும் தற்போதைய நிலையில் நெல்லியடிச் சந்தியிலிருந்து இவ்விடங்களுக்குச் செல்பவர்கள் அதிக தூரம் நடக்கவேண்டியுள்ளதென்றும் அம்மகஜரில்குறிப்பிடப்பட்டுள்ளது,

## 2 மணித்தியால லீவு வழங்க கோரிக்கை

பம்பலப்பிட்டி, செவ்

வெள்ளிக்கிழமைகளில் இந்து சமயத்தைச் சேர்ந்த அரசாங்கஊழியருக்கு அவர்கள் தங்கள் சமயாசாரக் கடமைகளைச் செய்வதற்கு காலையில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையும் அல்லது மாலையில் 2-30 மணி தொடக்கம் 4-30 மணி வரையும் லீவு வழங்குமாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நிதி மந்திரியிடம் கோரியுள்லது. இஸ்லாமிய மதத்தினருக்கு வெள்ளிக் கிழமைகளில் 2 மணித்தியாலமும், கிறிஸ்தவ மதத்தினருக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் 2 மணித்தியாலமும் லீவு வழங்கப்பட்டுள்ளது பற்றி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சென். பீட்டர்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், புதன்

நவாலி சென்பீட்டர்ஸ் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டைசிவன்கரபந்தாட்டக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் நவாலி சென்பீட்டர்ஸ் கோஷ்டி வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. என். சிவகுரு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## லிபேட்டிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி கேணியடி லிபேட்டிக் கழகத்திற்கும் நல்லூர் வள்ளுவர் கலாமன்றத்திற்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் திருநெல்வேலி லிபேட்டிக்கழகம் 6—0 கோல்களை போட்டு வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு. க. நித்தி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## ஸ்ரீராம கான சபா

பம்பலப்பிட்டி, செவ்.

போயா தினங்கள் விடுமுறையாக்கப்பட்டு சனிக்கிழமைகள் முழுநேர வேலை நாட்களாகியுள்ளதால் ஸ்ரீராம கானசபாவினர் பஜனைகள் நடத்துவதற்கு ஒவ்வொரு மாதத்திற்கும் புதிய பஜனை நாட்களை தயாரித்துள்ளனர். எதிர்வரும் மார்ச் மாதத்தில் வரும் ராமநவமி விழாவைக் கொண்டாடவும், அதையொட்டி மானவரிடையே எழுத்து, பேச்சுப் போட்டிகள் நடத்ததுவும் சபா தீர்மானித்துள்ளது.

## காலியில் திருவாதிரை

காலி, செவ்.


காலி ஸ்ரீ மீனும்பிகா உமேத சோமசுந்தரேஸ்வரர் ஆலய நடேசர் ஆர்த்திரா தரிசனம் இம்மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை காலை 5 மணிக்கு அபிஷேகமும் காலை 9 மணிக்கு சுவாமி எழுந்தருளலும் நடைபெறும்.

## கம்போடியா அருகே கடும் சண்டை

சைகோன், ஜன. 4

கம்போடிய எல்லைக்கருகே வியட்காங்கியருக்கும் அமெரிக்க தென்வியட்னும் துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


# 7 ரு. நிறையுள்ள கண்ணன கண்ணன்



## அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலஞன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு. 168/66

ஒஸ்டர்மில்க் குழந்தைப புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்
பகுதி 12, கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு



★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப் பவுடர்
★ பச்சைச் சந்தனம்
(உடன் யந்திரத்தினுல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541, 7068

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இணுவில் ஆஸ்பத்திரி

# ஊழியர் கோரிக்கையில் சமரச முடிவு

யாழ்ப்பாணம், புதன்

இணுவில் ஆஸ்பத்திரி ஊழியர்களின் பிரதிநிதிகளுக்கும் ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர்களுக்குமிடையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் தொழிற்கந்தோரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமுகமான முடிவு காணப்பட்டது.

யாழ்ப்பாணம் தொழில் உதவி ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில், ஆஸ்பத்திரி ஊழியர்களின் பிரதிநிதிகளாக வட இலங்கைத் தனியார் ஆஸ்பத்திரிகள் சங்கத் தலைவர் திரு. ஈ. சாமுவேல், திரு. த. பாலசிங்கம், திரு. த. அரியகுணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். யாழ். மாநகர சபை அங்கத்தவர் திரு எஸ். நாகராசாவும் ஊழியர் சார்பில் கலந்துகொண்டார்.

சில தினங்களுக்குமுன்னர் மேற்படி ஆஸ்பத்திரி ஊழியர் சில கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய வேலை நிறுத்தத்தை தொடர்ந்தே இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது

ஒரு மாதச் சம்பளத்தின் அரைவாசியை போனஸ்ஸாகக் கொடுப்பதற்கும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் தொழிற் சங்கம் ஒன்றினை நிறுவுவதற்கும், கூட்டங்கள் வைப்பதற்கும், அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கும் நிர்வாகஸ்தர்கள் அனுமதியளித்தனர்.

மேற்படி சலுகைகள் மானிப்பாய் கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏமாற்றியதாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்


வேலை காலி இருப்பதாகத் தெரிவித்து, பலரிடம் பிணைப்பணம் வாங்கி ஏமாற்றியதாக யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் அதிபரான எஸ். எஸ். புனிதன் என்பவரை யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் ராசையா கைதுசெய்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தார். எதிரியை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு விசாரணையை இம்மாதம் 18-ம் திகதிக்கு மாஜிஸ்டிரேட் ஒத்தி வைத்தார்.


REGAL—JAFFNA
NOW SHOWING
Cantinflas
in
UPS AND DOWNS
(Eastman Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
சிவாஜி - விஜயகுமாரி
நடித்த
பார் மகளே பார்

நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
பணக்காரக் குடும்பம்

வெற்றிகரமான 2வது வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
வீரக்காவியத்தின் விடிவிளக்கு
வெற்றித் தமிழகத்தின் பேசும் பெண் தெய்வம்
கற்புக்கரசி கண்ணகியின் வரலாறு!



மேகலா பிக்சர்ஸ அளிக்கும்
கருணாநிதியின்
பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.
டைரக்ஷன் — நீலகண்டன்.
கதைவசனம் — மு. கருணாநிதி.
இசை — சுதர்சனம்.


## ஆசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்கள் (ஆண்கள் அல்லது பெண்கள்)

செம்பியன்பற்று, குடத்தனை, அனலைதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் சேவையாற்றும் விசேஷ பயிற்சி ஆசிரியர்கள் மாற்றம் தவிர்க்கப்படும்.

### அதிகமான ஆசிரியர்கள்

பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் தொகையுடன் மாணவ ஆசிரியர்களின் எண்ணிக்கையும் சேர்த்து கணக்கிடப்பட்டு பின்னர் அப்பாடசாலைகளில் அதிகமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற கோதாவில் இடமாற்றம் பெற்றிருக்கும் ஆசிரியர்களின் விஷயங்கள் கவனிக்கப்படும் என்று கல்விமந்திரி உறுதி தெரிவித்துள்ளார். கல்வி இலாகாவின் இடமாற்றக் கொள்கை இங்கு தப்பானமுறையில் செயல்படுத்தப்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

### பொதுப் பட்டியல்

ஆசிரியர் நியமனம் பெற்ற திகதியை அடிப்படையாகக்கொண்டு பொதுவானதொருபட்டியல் தயாரிக்கப்படவேண்டும். குறிப்பிட்ட ஆசிரியரின் தரமும் அப்பொழுது கவனிக்க வேண்டும்.

### ஒரே சலுகை

அரசாங்கபாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமான சலுகைகள், வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலை ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவேண்டும்.

மேற்கூறப்பட்ட தீர்மானங்களை கல்விமந்திரி ஏற்றுக்கொண்டுள்ளார்.

கல்வி இலாகாவின் கொள்கைகளுக்கு மாறாக நடைபெறும் இடமாற்றங்கள் பற்றிய புகார்களை ஆசிரியர்கள் டாக்டர் குருகேயிடம் சமர்ப்பிக்கலாம் என்று கோரப்பட்டுள்ளது. டாக்டர் குருகே இதுசம்பந்தமான விசாரணைகளை நடத்துவார்.

## நாட்டிலும் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரியவில்லை. 'என்னப்பா, நீங்கள் டாக்ஸிக்காரராயிருந்தும் கொழும்பிலுள்ள தெருக்களைத் தெரியாவிட்டால் என்னைப்போன்ற புதியவர்கள் என்னசெய்வது' என்று நண்பர் நொந்து கொண்டார். டாக்ஸிக்காரர் அதைவிடமிகவும் வேதனைப்பட்டார். 'நாங்கள் என்ன செய்வோம், ஐயா! கொழும்பு தெருக்கள் எல்லாம் இப்பொழுது மாவத்தைகளாக மாறிவிட்டன. நாளுக்குநாள் பெயர்களை மாற்றுகிறார்கள். எமக்கே இதுபெரிய திகைப்பாயிருக்கிறது' என்றார் அவர் கடைசியில் வழியில்போன ஒருவர் அத்தெருவின் பழைய பெயரைச் சொன்ன போது டாக்ஸிக்காரரின் முகத்தில் வெளிச்சம் வந்தது.

—வழிப்போக்கன்

## பரிசோதகருக்கு பதில் வைத்திய அதிகாரி

பம்பலப்பிட்டி. செவ்வாய்

அடுத்த மாதத்திலிருந்து நகரப்பகுதிகளில் சுகாதார பரிசோதகர்களுக்குப் பதிலாக சுகாதார அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். 20 வைத்தியர்கள் இப்போது பயிற்சியை இப்பொழுது முடித்துக்கொண்டுள்ளார்கள்.

சட்டவிரோத குடியேற்றம்

# தடை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்

## தலைமை இணைப்புப் பகுதி காங்கேசன்துறையில் திறக்கப்பட்டது

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன் துறையில் சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் படையின் தலைமை இணைப்புக் காரியாலயம் நேற்று முன்தினம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து சட்டவிரோதக் குடியேற்ற தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவிருக்கின்றன.

காங்கேசன் துறை பொஸ் நிலையத்துக்கு அண்மையில் இத்தலைமை இணைப்புக் காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது. பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லெயனல் சேனநாயக்கா இக்காரியாலயத்தின் தலைமை இணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சட்டவிரோத குடியேற்றத் தடுக்கும் பணியில் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் படையினருக்கு பொறுப்பாக இருப்பதுடன் சட்டவிரோதக் குடியேற்றத்தைதை தடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள கடற்படையினர், இராணுவத்தினர், பொலிசார் ஆகியோரின் வேலைகளை இணைக்கும் தொடர்பு அதிகாரியாகவும் கடமையாற்றுவார்.

இதுவரை காலமும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் கைது செய்யப்பட்டவுடன் அந்தப் பகுதி உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டவர்கள் சம்பந்தமான உத்தரவுகளை வழங்குவார்கள். இப்போது வடபகுதியின் எப்பகுதியில் கைது செய்யப்பட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் இணைப்பு அதிகாரியான பொலிஸ் சுப்பிரிண்டன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர்தான் சம்பந்தப்பட்ட மேல் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

சென் மாத பிற்பகுதியில் பலாலி இராணுவ நிலையத்தில் கர்ணல் மரியாய் வடபகுதியில் கள்ளக்குடியேற்றத் தடுப்பு வேலையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரின் வேலைகளை ஒருமுகப்படுத்தும் தலைமைக் காரியாலயம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினரின் ரோந்து சுற்றும் வேலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வடபகுதியில் ஏறக்குறைய இரண்டாயிரம் துருப்புகள் சட்டவிரோதக் குடியேற்ற தடுப்பு வேலைகளில் இப்பொழுது ஈடுபட்டு வருகின்றனர்.

### தேவை

திருகோணமலையில் புதிதாக தொடங்கியிருக்கும் நெசவு நிலையத்திற்கு கீழ்க்கண்ட வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். நெசவாளர்- ஷெ நிலையத்தில் ஆசிரியராக கடமையாற்றுதல். ஆண், பெண் யாரேனும் நெசவு வேலையில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். நெய்தல்- ஆண், பெண் யாரேனும் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் பேற்றிருத்தல் வேண்டும். தொடர்பு கொள்க. முகாமையாளர் புஹாரி நெசவு நிலையம். 109, ஏகாம்பரம் வீதி, தொலைபேசி எண். 321 திருகோணமலை. 1694

### விசேஷ அபிஷேகம்

கோண்டாவில், புதன்

ஐ. நா. சபைக்குச் சென்று திரும்பிய திரு. ஜி. ஜி. பொன்னம்லத்தி பெயரால் ஓர் விசேஷ அபிஷேகத்தை கொக்குவில் மேற்கு மணியர்காடு சிவசுப்பிரமணிய கோவிலில் இம்மாதம் 6-ந் திகதி நடத்த கொக்குவில் மேற்கு இளம் வாலிபர்கள் ஒழுங்கு செய்துள்ளனர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கொக்குவில் ஆடியபாதச் சந்தியிலிருந்து ஊர்வலமாக கோவில் வரை அழைத்துச் செல்லப்படுவார்.

### இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் திருவெம்பாவை 9-ம் நாளான இன்று காலை 5 மணிக்கும் இரவு 7 மணிக்கும் திருவெம்பாவை உற்சவம் நடைபெறும்: இரவு 7-30மணிக்கு திருவூஞ்சல் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் மாணிக்கவாசகர் கதாப்பிரசங்கத்தொடரில் 'மணிவாசகர் இறையடி சேர்தல்' என்னும்பொருள் பற்றிக்கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

### மணிவாசகர் விழா

தலைவர்-: திரு. ஆ. தியாகராசா (அதிபர் இந்துக்கல்லூரி, காரைநகர்), 6.30 திருவாசகத் திருமுறை ஓதல், 6-45 தலைமைப் பேருரை, 7-00 'திருவெம்பாவை' — வித்துவான் க. வேந்தனார். 7-40 சங்கீத கதாப்பிரசங்கம் — 'மார்க்கண்டேயர்' செல்வன் பொ. ரகுபதி, 8-45 தலைவர் நிறைவுரை, 9-00 திருவாசகத் திருமுறை ஓதல்.

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி, பலாலி றோட்டில் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: C. N. பாலச்சந்திரன், ஆசிரியர், திருநெல்வேலி வடக்கு. 1699

5 பரப்புக் காணி. 21, B. A. தம்பி லேன், வண்ணார்பண்ணை. விபரங்களுக்கு: 31, ஓட்டுமடம் றோட், வண்ணார்பண்ணை. 1695

### அறிவித்தல்

1965-ம் ஆண்டு மங்கள வீட்டுத்தளபாடம் நடத்திய நத்தார் புதுவருட மலிவு விற்பனையில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

1-வது பரிசு
ஒரு கண்ணாடி மேசை
A. V. கைலாசநாதன்,
காவலடி - மயிலிட்டி.

2-வது பரிசு
ஆறு கதிரைகள்
A. மரியதாஸ்,
79, பீச் றோட், கரையூர்,
யாழ்ப்பாணம்.

3-வது பரிசு
ஒரு பிள்ளைத் தொட்டில்
G. யேம்ஸ்,
27, ஓடக்கரை றோட்,
ரக்கிளமேசன்
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி; 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதி அச்சிட்டு [illegible] [illegible]ப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org